SC No. 396/2018
Dated : 27-2-2023

Time: 1.02. pm to 1.21 pm

P.W. -1 சாட்சி ஈஸ்வரன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>(அனைத்து எதிரிகளும் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்)</u>

<u>குறுக்கு விசாரணை:</u>

1 ம் எதிரியும் 5 ம் எதிரியும் என் மனைவியின் உடன்பிறந்த சகோதரர்கள். சம்பவத்திற்கு முன் நான் லாரி மற்றும் நெல்அறுவடைசெய்யும் வாகனம் வைத்திருந்தேன். அதை நானும் என்மகனும்தான் பராமரித்து வந்தோம். எங்களுடைய தோட்டம் சதாசிவம் காட்டிலிருந்து சுமார் 1/2 கிமீ துாரம். வடக்கு பார்த்தாற்போல் எங்களுக்கு ஒரு ஓட்டு வீடு ஒரு கூரை வீடு உள்ளது. என் தோட்டத்திற்குவடபுறம் 5 எதிரி வீடு உள்ளது என்றால் இல்லை. எனது வீட்டிற்கும் எனது தோட்டத்தில் உள்ள கிணற்றிற்கும் 200 அடி துாரம் இருக்கும். அந்த கிணற்றிற்கு நான் வடபுறமாக சென்று மீண்டும் கிழபுறம்செல்லவேண்டும் . அந்த கிணற்றின் மேற்குபுறம் மின்மோட்டார் தொங்குவதற்காக ஒரு கிரேன் உள்ளது. அந்த கிணற்றின் மற்ற பக்கத்தில் சுற்றுச் சுவர் உள்ளது. சம்பவத்தின்போது சுமார் 40 அடி தண்ணீர் இருந்தது. 29-9-2014 அன்று நானும் என் மனைவி ,மகன், மற்றும் இருவருடன் 2 ம் எதிரி வீட்டின் செல் சார்ஜர் போட்டு அதை 5 ம் எதிரியிடம் கொடுக்க சென்ற போது அவரை வழிமறித்து நாங்கள் தாக்கி விட்டோம் என்றால் அது தவறு.

2) 2 ம் எதிரியை ஏன் அடிக்கிறீர்கள் என 5 ம் எதிரி கேட்டதற்கு அவரையும் நாங்கள் மண்டையை உடைத்து விட்டோம் என்றால் அது தவறு. துரைசாமி அது சம்மந்தமாக சிகிச்சை பெற்றார் என்றால் அது தவறு. மேற்படி சம்பவத்தின் மூலம் எங்களுடன் இருந்த சுப்ரமணியன் என்பவருககு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 7 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்தார் என்றால் சரிதான். அந்த வழககில் நாஙகள் அனைவரும் முன் ஜாமீன் வாங்கி கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி சதாசிவம் கிராமத்திற்கும் ஆத்துருக்கும் 12 கிமீ துாரம் இருக்கும் அது 8 கி மீ துாரம் என்றால் அது தவறு. அங்கிருந்து இரு சக்கர வாகனத்தில் 1/2 மணி நேரத்தில் ஆத்துார் வரலாம் என்றால் சரிதான்.

3) 22-9-2014 அன்று விடியற்காலை 4 மணிக்கு நான் ஆத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று என்னை காப்பாற்ற யாரும் வராததால் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சென்றேன். எனக்கு நீச்சல் தெரியாது. என்னை கிணற்றில் தள்ளும்போது என்ன நிலையில் இருந்தேன் என்றால் எதிரிகள் தான் என் குடும்பத்தாரை தாக்கி என்னை இழுத்துக்கொண்டு சென்றுகிணற்றில்

போட்டு விட்டார்கள். நான் கிணற்றில் விழுந்து 3 -1/2 மணி நேரம் கழித்துதான் தீயணைப்பு வண்டி வந்தது . மேற்படி எனக்கு நீச்சல் தெரியாது என்பதால உண்மையிலேயே எதிரிகள் என்னை தள்ளியிருந்தால் நான் தண்ணீரில் மூழ்கி
இறந்திருப்பேன் என்றால் உள்ளே விழுந்தவுடன் நான் பாறையை பிடித்துக்கொண்டு பிறகு பைப்பை பிடித்து தொங்கி கொண்டிருந்தேன். மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4) மேற்படி 5ம் எதிரி நாங்கள் தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் அந்த குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக பின்னிட்டு நாங்கள் ஆஜர் எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கை கொடுத்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடம் நாங்கள் ரூ 40 லட்சம் கடன் வாங்கிக்கொண்டு எனது நிலத்தை பவர் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் 4 லட்சம்தான் கடன் வாங்கினேன். மேற்படி பணத்தை சாந்தி என்பவரிடம் வாங்கி கொடுத்ததால் அவர் நெருக்கடிக்கு பணிந்து 1ம் எதிரி கிரையம் செய்து விட்டார் என்று சொன்னால் அதுதவறு. அதற்கு முன்பே நாங்கள் சிவில் வழக்கு தாக்கல் செய்து வழக்கு விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பணப்பிரச்சனைக்காக இப்போது நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

5) மேற்படி எதிரிகள் அனைவரும் கைது செய்யப்பட்டதால் 1ம் எதிரி அரசு பணியிலிருந்து தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் நான் சொன்னது போன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் கிணற்றில் விழவில்லை என்றும், விழுந்திருந்தால் உடனடியாக யாராவது என்னை காப்பாற்றிருப்பார்கள் என்றும் எனவே அந்த சம்பவமே பொய்யானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

**" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."**

**Sd/-K.Ananthan**
**ASSISTANT SESSIONS JUDGE,**
**Attur.**